


Voice of Jagadguru

advaitam paramanandam an e-magazine on advaita



# ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## அருள் மொழிகள்



தினமும் பகவானுடைய ரூபத்தை மனதில் தியானித்துக் கொண்டிரு; பகவானுடைய நாமத்தை வாயால் சொல்லிக்கொண்டிரு, பகவானுடைய சேவையை சரீரத்தால் செய்து கொண்டிரு. உன்னுடைய மனோ, வாக், காயங்கள் அத்தனையும் பகவானுடைய சேவையில் விநியோகமானால் நீ தன்யனாகி விடுவாய். இதே விஷயத்தை சங்கரர் வேறொரு இடத்தில்,

ஸர ரஸனா தே நயனே தாவேவ கரௌ
ஸ ஏவ க்ருதக்ருத்ய: ।
யா யே யௌ யோ பர்கம் வத்தீக்ஷேதே ஸதார்ச்சத: ஸ்மரதி ॥

என்று கூறுகிறார்.

"நாக்கு என்றால் எது? பகவானுடைய நாமத்தை எது சொல்லுமோ அதுதான் நாக்கு. பகவானுடைய நாமத்தைச் சொல்லாமல் வேண்டாத பேச்சுக்களைப் பேசும் நாக்கு நாக்கல்ல. அது பிரயோஜனமில்லாதது. கண்ணென்றால் எது? பகவான் சன்னிதிக்கு வந்து அந்த பகவானை தரிசனம் செய்யக்கூடிய கண் எதுவோ அதுதான் கண். அது இல்லாவிட்டால் அது என்ன கண்? கை என்று சொன்னால், எந்த கை பகவானை பூஜிக்கின்றதோ அதுதான் கை இல்லாவிட்டால் அது என்ன கை? அது இது என்று சொல்ல வேண்டியதில்லை. நம்முடைய ஸமஸ்த தேஹேந்திரியங்களும் பகவானுடைய சேவையில் விநியோகம் ஆனால்தான் இதற்கு பரிபூரணம் ஏற்படும். ஆகையால் எப்போதும்கூட பகவானை மறக்காமல் பகவானுடைய உருவத்தை மனதில் தியானம் செய்து கொண்டிரு" என்று பகவத்பாதாள் தம்முடைய ஸ்தோத்ர சாஹித்யத்திலே மிக அழகாக இந்த விஷயத்தை பிரதிபாதனம் செய்தார். எல்லோரும் அவருடைய ஸ்தோத்திரத்தைப் படிக்கிறோம். அவர் என்ன சொன்னார் என்பதை சரியாக புரிந்துகொண்டு அது போல் நடந்து நம்முடைய ஜென்மத்தை தன்யமாக்கிக்கொள்ள வேண்டியது ரொம்ப அவசியமானது.

—ஜகத்குரு சங்கராசார்யர் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹா ஸ்வாமிகள்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

# விதுர நீதி

सम्पन्नतरमेवान्नं दरिद्रा भुञ्जते लदा ।
क्षुत्स्वादुतां जनयति लाचाढ्येषु सुदुर्लभा
॥85॥

ஸம்பன்னதரமேவான்னம்’ த³ரித்³ரா
பு⁴ஞ்ஜதே லதா³ .
க்ஷுத்ஸ்வாது³தாம்’ ஜனயதி
லாசாட்⁴யேஷு ஸுது³ர்லபா⁴ ..85..



பசி இருந்தால் எளிய உணவும் மிகவும் சுவையாகத் தோன்றும். ஆனால் செல்வந்தர்களுக்கு உண்மையான பசி அரிதாக இருப்பதால், அவர்களிடம் உணவின் உண்மையான சுவையையும் அனுபவிப்பது அரிதாகும். ஏழைகள் பசியோடு உண்பதால் அவர்களின் சாதாரண உணவும் அமுதமாகிறது. உணவிற்கு உண்மையான சுவையைத் தருவது பசியே; அந்தப் பசி செல்வந்தர்களிடம் அரிதாகக் காணப்படுகிறது.

प्रायेण श्रीमतां लोके भोक्तुं शक्तिर्नविद्यते ।
जीर्यन्त्यपिहि काष्ठानि दरिद्राणां महीपते ॥86॥

ப்ராயேண ஶ்ரீமதாம்’ லோகே போ⁴க்தும்’ ஶக்திர்னவித்³யதே .
ஜீர்யந்த்யபிஹி காஷ்டா²னி த³ரித்³ராணாம்’ மஹீபதே ..86..

அரசனே! பொதுவாகச் செல்வந்தர்களுக்கு உணவை நன்றாக உண்டு ஜீரணிக்கும் ஆற்றல் இருப்பதில்லை. ஆனால் ஏழைகளுக்கு மரக்கட்டைகளைப் போன்ற கடினமான உணவுகள்கூட எளிதில் ஜீரணமாகிவிடுகின்றன.

अवृत्तिर्भयमन्त्यानां मध्यानां मरणाद्भयम् ।
उत्तमानांतु मर्त्यानां अवमानात्परं भयम् ॥87॥

அவ்ரு’த்திர்ப⁴யமந்த்யானாம்’ மத்⁴யானாம்’ மரணாத்³ப⁴யம் .
உத்தமானாந்து மர்த்யானாம்’ அவமானாத்பரம்’ ப⁴யம் ..87..

கீழ்மட்ட எண்ணம் கொண்டவர்களுக்கு வாழ்வாதாரம் இழப்பதே பெரிய பயம். சாதாரண மனிதர்களுக்கு மரணமே பெரிய பயம். ஆனால் உயர்ந்த குணமுடைய மகான்களுக்கு அவமானம்தான் மரணத்தைவிடப் பெரிய பயமாகும்.
(தொடரும்....)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

## ஆசார்யாளின் உபதேசங்கள்

**(தக்ஷிணாம்னாய சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸந்நிதானம் ஸ்ரீ பாரதீ தீர்த்த மஹாசஸ்வாமிகள் அருளியது)**

## 13. பக்தியில் பல விதம்

**சரதிந்து விகாஸி மந்தஹாஸாம் ஸ்புரதிந்தீவரலோசனாபிராமாம் |**
**அரவிந்த ஸமான ஸுந்தராஸ்யாம் அரவிந்தாஸன ஸுந்தரீமுபாஸே ||**



பகவானுடைய அனுக்ரஹத்தைச் சம்பாதிப்பதற்கு முக்கியமான ஸாதனம் பக்தி ஆகும். பக்தி இருந்துவிட்டால் பிறகு வேறெந்த யோக்யதையும் ஒருவனுக்குத் தேவையில்லை. ஆதிசங்கரர் அதனால்தான்,

**பக்தி கின்ன கரோத்யஹோ வனசரோ பக்தாவதம்ஸாயதே ||**

என்று கூறினார். பக்தியின் மிகுதியால் காட்டிலிருக்கும் ஒரு வேடனும் எல்லோருடைய கௌரவத்திற்கும் பாத்திரமாகிவிடுகிறான். கண்ணப்பநாயனாரைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவன் ஒரு வேடன். அவனுக்குப் படிப்பு உண்டா? ஆசாரம் உண்டா? பணம்தான் உண்டா? ஒன்றுமேயில்லை. ஆனால், அவனுக்கிருந்த பக்திக்கு அளவேயில்லை.

**மார்காவர்திதபாதுகா பசுபதேரங்கஸ்ய கூர்சாயதே**
**கண்டூஷாம்புநிஷேசனம் புரரிபோர்திவ்யாபிஷேகாயதே |**
**கிஞ்சித்பக்ஷிதமாம்ஸசேஷகபலம் நவ்யோபஹாராயதே பக்தி:**
**கின்ன கரோத்யஹோ வனசரோ பக்தாவதம்ஸாயதே ||**

காட்டிலிருந்த ஒரு சிவலிங்கத்தைப் பார்த்த கண்ணப்பன் அந்த லிங்கத்திற்கு யாருமே வெகு நாட்களாகப் பூஜை செய்யாதிருப்பதை உணர்ந்தான். சிவலிங்கத்தின் மேல் தூசி படிந்திருந்தது. உடனே சிவலிங்கத்திற்குப் பூஜை செய்ய எண்ணினான் கண்ணப்பன். ஆனால், அதற்கான பொருட்கள் ஒன்றுமே

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

அவனிடம் இருக்கவில்லை. தனது பாதரட்சையினால் சிவலிங்கத்தைத் துடைத்தான். பக்கத்தில் ஆறு ஒன்று இருந்தது. ஆனால், அதிலிருந்து அபிஷேகத்திற்கு ஜலம் கொண்டுவர அவனிடம் பாத்திரமொன்றும் கிடையாது. தனது வாய் நிறைய ஜலத்தை நிரப்பிக் கொண்டு வந்த அவன் அந்த நீரை சிவலிங்கத்தின் மீது துப்பி அபிஷேகம் செய்தான். நைவேத்தியத்திற்கு என்ன செய்வது ? யோசித்த அவன், தான் வேட்டையாடிக் கொண்டுவந்திருந்த மிருகங்களை சுவாமிக்கு ஸமர்ப்பித்தான். அவனுடைய பூஜையை பகவான் மிகவும் ஸந்தோஷமாக ஏற்றுக்கொண்டான். ஏனென்றால், கண்ணப்பனின் பக்தி அவ்வளவு சிறப்பாய் இருந்ததே அதற்குக் காரணம். இந்த இடத்தில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். சிலர் கண்ணப்ப நாயனாரைப் போல் தாங்களும் ஆசாரமில்லாமல் பூஜை செய்யலாம் என்று நினைக்கலாம். கண்ணப்பநாயனார் செய்த இன்னொரு அரிய செயலை நான் கூறப் போகிறேன் . இந்தக் காரியத்தையும் செய்ய அவர்கள் தயாராக இருப்பார்களேயானால், கண்ணப்பநாயனாரைப் போலவே அவர்களும் ஆசாரமின்றி பூஜை செய்யலாம். அதை இறைவன் ஏற்றுக்கொள்வான்.

பூஜையை முடித்த கண்ணப்பன் இறைவனுடைய கண் ஒன்றிலிருந்து ஜலம் வழிந்து கொண்டிருந்ததைப் பார்த்தான். "ஐயையோ, பகவானின் கண் சரியில்லை" என்றெண்ணிய கண்ணப்பன் உடனே தனது ஒரு கண்ணைப் பிடுங்கி, பகவானின் 'சரியில்லாத' கண்ணின் மேல் பொருத்தினான். அப்போது பகவானின் இரண்டாவது கண்ணிலிருந்து நீர் வர ஆரம்பித்தது. "பகவானுக்கு இந்தக் கண்ணும் சரியில்லை" என்று நினைத்த அவன், தனது இரண்டாவது கண்ணையும் பிடுங்கி இறைவனுக்கு அளித்தான். அவனது செயலால் மகிழ்ந்த இறைவன் அவன் முன்னே தோன்றி அவனுக்கு மோக்ஷத்தை அளித்தார். கண்ணப்பனுடைய பக்திக்கு அத்தகைய உயர்ந்த பலன் கிடைத்தது. மனிதனுக்கு, பக்தி என்பது மிகவும் அவசியம். பக்தி பல வகையாக சாஸ்திரங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. சிலருக்கு பகவானைப் பற்றிய கதாகாலட்சேபங்களை கேட்பது மிகப் பிரியமான ஒன்று. எங்கே கதாகாலட்சேபம் நடந்தாலும் அங்கு அவர்களைப் பார்க்க முடியும். அது ஒருவிதமான பக்தி. சிலருக்கு பகவானின் நாமங்களை எப்போதும் உச்சரித்துக் கொண்டிருப்பதில் பிரியமிருக்கும்; மற்ற எதுவும் அவர்களுக்குத் தேவையில்லை என்று கருதுவார்கள். கோபிகா ஸ்த்ரீகள் கிருஷ்ண பரமாத்மாவிடம் அளவற்ற பக்தி செலுத்தினார்கள் என்று பாகவதத்தில் படிக்கிறோம். இவ்விஷயத்தை மஹாகவி ஒருவர்,

**விக்ரேதுகாமா கில கோபபாலா முராரிபாதார்ப்பிதசித்தவ்ருத்தி: |**
**தத்யாதிகம் மோஹவசாதவோசத் கோவிந்த தாமோதர மாதவேதி ||**

என வர்ணித்துள்ளார். (தொடரும் .....)

Voice of Jagadguru
advaitam paramanandam
an e-magazine on advaita

**ஸத் ஸம்ப்ரதாயம்**


An Unit of the e magazine Voice of Jagadguru)

## என்றும் புதியவர்

### ஜகத்குரு சங்கராசார்யார் ஸ்ரீமத் அபிநவ வித்யா தீர்த்த மஹாஸ்வாமிகள்

## 2. பேரறிவு (மஹாப்ரக்ஞை)

### மஹாப்ரக்ஞை — கல்விசார் அறிவாற்றலுக்கு அப்பால்



மூன்றாவதாக, எந்த ஒரு குறிப்பிட்ட அறிவாற்றலின் வளர்ச்சியும் அடையாளம் காட்டக் கூடியதாக இருக்க வேண்டும். எல்லா மனிதர்களும் (இதில் அசாதாரணமானவர்களும் அடக்கம்) அந்த ஆற்றலின் பிறப்பிலிருந்து முழுமை வரை ஒரு வளர்ச்சிப் பாதையில் செல்கின்றனர். ஆதலால், அந்த ஆற்றலின் வல்லமை ஒருவருள் எப்படிப் படிப்படியாக வளர்கிறது என்பதைக் காணமுடியும். மேலும், எந்த அறிவாற்றலும் பொதுவாகத் தனிமையில் வளர்வதில்லை. எனவே அறிவாற்றல் எந்தச் சூழ்நிலையில் எந்த விதமாக வெளிப்படுகிறது என்பதையும் கூற இயலும். தவிரவும் அறிவாற்றல் என்பது ஒரு திறல் (potential) மட்டுமே. அது எல்லா நேரங்களிலும் வெளிப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இனி, பல அறிவாற்றல்களுக்கும் பன்முகத்தன்மை கொண்ட ஆளுமைக்கும் தொடர்பு என்ன என்பதைப் பார்ப்போம். பொதுவாக ஒருவருடைய அறிவாற்றலின் தாக்கம் அவரது ஆளுமையில் வெளிப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட அறிவாற்றல்கள் இருப்பின் அந்த ஆற்றல்கள் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டு வெளிப்படும் போது ஆளுமையில் வேறு பரிமாணங்கள் தோன்றுகின்றன. உதாரணமாக, கணிதத்தில் வல்லவர் நல்ல பேச்சாளராகவோ எழுத்தாளராகவோ இருந்தால் அவருடைய ஆளுமையில் "கணித ஆராய்ச்சியாளர்" என்ற பரிமாணத்துடன் "கணிதத்தைச் சாதாரண மக்களுக்கு எடுத்துச் சென்றவர்" என்ற பரிமாணமும் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. கார்ட்னரின் கோட்பாட்டின் படி, கணிதத்தில் வல்லமை என்பது தர்க்கம்-கணிதம் சார்ந்த அறிவாற்றலின் அறிகுறி. ஆனால் அதைப் பலருக்கும் விளங்குமாறு உரையாற்றுவதோ அல்லது புத்தகங்கள் எழுதுவதோ மொழி சார்ந்த அறிவாற்றலின் அறிகுறி. முதலாவது ஆற்றல் மட்டும் இருந்தால் இரண்டாவதும் இருக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனால் ஒருவருக்கு இப்படி ஒன்றுக்கு மேற்பட்ட அறிவாற்றல்கள் இருந்தால் அவருடைய ஆளுமை

பன்முகத் தன்மையாக இருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதுவே ஆளுமைக்கும் அறிவாற்றலுக்கும் உள்ள தொடர்பு. இனி, இதை ஒட்டி ஆசார்யாளின் அறிவாற்றல்(களைப்) பற்றிப் பேசுவோம்.


## மஹாப்ரக்ஞை - தர்க்கம் சார்ந்த அறிவாற்றல்

முதலில் தர்க்கம் கணிதம் சார்ந்த அறிவாற்றலை எடுத்துக் கொள்வோம். இதில் முக்கியமான கூறுகள் நுண்மையாக்கம் (abstraction) மற்றும் காரண ஆய்வு (reasoning). ந்யாய (தர்க்க) சாஸ்திரத்திலும் இக்கூறுகள் முக்கியமானவை. ந்யாய (தர்க்க) சாஸ்திரத்தில் இந்த இரண்டு கூறுகளைக் கொண்டு நீண்ட வாதப் பிரதிவாதங்கள் தொடுக்கப் படுகின்றன. ந்யாய சாஸ்திரத்தில் ஆசார்யாளுக்கு இருந்த வல்லமை பற்றி அவருடைய கல்வியறிவைப் பற்றிப் பேசும் போது விவரமாகக் கூறினோம். அதனால் இந்த அறிவாற்றல் பற்றி இங்கே மீண்டும் பேச வேண்டிய அவசியம் இல்லை. தவிரவும், சாஸ்திர சர்ச்சைகளில் தர்க்கம் - கணிதம் சார்ந்த அறிவாற்றல் என்பது தனியாக வெளிப்படாது, மொழிசார் அறிவாற்றலுடன் சம்பந்தப்பட்டே வெளிவருகிறது. எனவே, நமது கவனத்தை மொழிசார் அறிவாற்றல் பக்கம் திருப்புவோம்.

## மஹாப்ரக்ஞை - மொழிசார் அறிவாற்றல்


மனித இனத்தில் பரவலாகக் காணப்படும் அறிவாற்றல் மொழிசார் அறிவாற்றலே. கார்ட்னர், இந்த அறிவாற்றலின் அடிப்படைக் கூறுகளாக ஒலியியல் (phonology), இலக்கண விதிகள் (syntax), சொற்பொருளியல் (semantics) மற்றும் வழக்கு (pragmatics) என்ற நான்கினைக் கூறுகிறார். பொதுவாக உலகில் உள்ள எந்த மனிதரும் இந்த நான்கும் சற்றும் இல்லாமல் திறம்படச் செயல்பட முடியாது. ஒரு சிறந்த புலவருக்கோ பேச்சாளருக்கோ இவை சிறப்பாக அமையும் என்பது வெளிப்படை. ஆனால் நம் போன்றவருக்கும் இவை ஓரளவு இருப்பதனாலேயே ஒரு நல்ல செய்யுளையோ ஒருவர் நன்றாக உரையாற்றுவதையோ ரசிக்க முடிகிறது. ஒரு சாதாரண மனிதருக்கே இந்த ஆற்றல் தேவையென்றால் மற்றவருக்கு உபதேசம் செய்யும் பொறுப்பு உள்ளவருக்கு இது தேவை மட்டுமல்ல, முக்கியமும் ஆகிறது. மேலும் பல்வேறு மொழிகள் பேசும் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்ய வேண்டும் என்றால் இந்த ஆற்றல் ஒரு மொழியில் மட்டுமல்லாமல் ஒரு சில மொழிகளில் இருக்க வேண்டும்.

(தொடரும்…..) மிக்க நன்றி : Centre for Brahmavidya



# Voice of Jagadguru

advaitam paramanandam — an e-magazine on advaita



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

## நீதி மஞ்ஜரீ

### ஸ்ரீ ஞானானந்த பாரதீ ஸ்வாமிகள் இயற்றியது.

### அத்யாயம் - 7

### பலன் கொடுப்பது கடவுளே



கோவிலில் அர்த்தஜாம பூஜை நடந்து அர்ச்சகரும் வெளியில் போய்விட்டார். மணி பன்னிரண்டடிக்க இன்னும் பத்து நிமிஷம் தானிருக்கிறது. அந்தக் கோவிலிலிருந்த ஈசுவரன் தன்னை ஏமாற்றி 75000 ரூபாய் நஷ்டப்படுத்திவிட்டாரென்று கோபம் கொண்டு கோவிலில் நுழைந்தான். கர்ப்பகிருஹம் சாற்றப்பட்டிருந்தது. லக்ஷரூபாய் கொடுத்துவிடுகிறேன் என்ற விநாயகர் வெளியில் நினைத்து அவர் துதிக்கைக்கு இடுக்கில் கையைக்கொடுத்து இருந்தார். தன் கோபத்தை அவரிடமாவது காட்டவேண்டுமென்று பலாத்காரமாக இழுத்தான். கணபதி மிருதுவாக துதிக்கையை இறுக்கினார். கை நசுங்கிற்று. கையை எடுத்துப் பார்த்தான். முடியவில்லை. இன்னம் இறுகிக்கொண்டே வருகிறது. வலிக்கவாரம்பித்தது. இரண்டு நிமிஷத்திற்குள் வலிதாங்க முடியவில்லை. எவ்வளவு திமிரிப்பார்த்தும் பலிக்கவில்லை. அந்த ஸமயத்தில் கர்ப்பகிருஹத்திலிருந்து அம்பாள் சப்தம் கேட்டது. "என்ன கணபதி, இன்று ராத்திரி பன்னிரண்டு மணிக்குள் அந்தப் பிச்சைக்காரனுக்கு லஷரூபாய் கொடுக்கச்சொன்னோமே, கொடுத்துவிட்டாயா?” என்று. அதற்கு கணபதி, 75000 ரூபாய் நேற்று ராத்திரியே கொடுத்துவிட்டேன். பாக்கி கொடுப்பதற்குள் அந்தப் பிச்சைக்காரன் போதும் என்று சொல்லிவிட்டான். இருந்தாலும் நாம் சொன்னபடி கொடுத்துத்தான் தீரவேண்டும். அதற்காக பாக்கி ரூ.25000-க்கு நபர் ஜாமீன் பிடித்து வைத்திருக்கிறேன். சீக்கிரம் பாக்கியும் செல்லாகிவிடும்" என்று சொல்லி மறுபடியும் ஒரு இறுக்கு இறுக்கினார். இந்த ஸம்பாஷணையைக் கேட்ட மார்வாரி "ஸ்வாமி. பாக்கியையும் கொடுத்துவிடுகிறேன், என்னை விட்டால் போதும்' என்று பிரார்த்தித்து உடனே தன் மடியிலிருந்த பாக்கி ரூபாயை இடதுகையால் எடுத்து அந்தப் பிச்சைக்காரனிடம் கொடுத்தான். மணி பன்னிரண்டு அடித்தது. விநாயகர் கையை விடுமுன் மார்வாரியைப்

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

பார்த்து "அடே அசடே, ஈசுவரன் எவ்விதமாகத்தான் கொண்டுவந்து கொடுப்பாரென்று உனக்கு எப்படித்தெரியும்? அவர் கொடுக்க உத்தேசித்திருப்பதை மாற்றி அதன் பலனை நீ அடைந்துவிடலாம் என்றும் நினைத்தாயே? என்ன மௌட்டியம்? இனிமேலாவது புத்தி வந்திருக்கும் என்று நினைக்கிறேன்" என்று புத்திமதி சொல்லி அனுகிரஹித்து அனுப்பினார்.

இந்தக் கதையில் அந்தப்பிச்சைக்காரனுக்குப் பலன் கொடுத்தவர் ஈஸ்வரன் தான் என்று நன்றாய் விளங்கும். பணம் அந்த மார்வாரி கையிலிருந்து வந்ததை வைத்துக்கொண்டு அவன் தான் பலன் கொடுத்தான் என்று சொல்லுவது முறையாகாது. இப்படியே ஒவ்வொரு விஷயத்திலும் நமக்குப் பிரத்யக்ஷமாய் உதவி செய்கிறவர்கள் சிலர் இருந்தாலும், நம்முடைய காமம் பலன் கொடுக்க வேண்டிய காலத்தில் ஈசுவரனால் பிரேரிக்கப்பட்டவர்களாய் அவர்கள் நமக்கு உதவி செய்கிறார்களென்றே பாவிக்க வேண்டும். வாஸ்தவமும் அப்படித்தான். ஈசுவரனுக்கு அவர்கள் கருவியாக இருப்பதைக் கொண்டு அவர்களிடமும் நன்றி பாராட்ட வேண்டியது நியாயமாயிருந்தாலும், அந்தக் கருவியை ஏவின ஈசுவரனை மறந்துவிடக்கூடாது.

कामैस्तैस्तैः हृतज्ञानाः प्रपद्यन्तेऽन्यदेवताः । கீதை 7 (20)
लभते च ततः कामान् मयैव विहितान् हि तान् ॥ கீதை 7 (22)

அந்தந்த கர்மங்களை நிறைவேற்றுபவர்களாக நினைத்துப் பற்பல தேவதைகளை உபாஸித்தாலும்கூட, அவர்களுக்கும் அந்தர்யாமியான ஈசுவரனால் தான் அந்தந்த பலன்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் அவர் நேரில் கொடுக்காமல் உபாஸ்யமான தேவதை மூலமாகவே கொடுப்பார். இவ்விதம் பரிச்சின்னமாய் உபாஸிப்பதால் பலனும் பரிச்சின்னமாய் அநித்தியமாய் விடுகிறது.

अन्तवत् तु फलं तेषां तद्भवत्यल्पमेधमाम् । கீதை 6 (23)

என்று சொல்லியிருக்கிறபடி நாம் "அல்பமேதஸ்", "இளம்புத்தி உள்ளவர்களாயிராமல் அபரிச்சின்னமான ஈசுவர தததவத்தையே பலன் கொடுப்பவர் என்று தெரிந்து உபாஸிப்போமானால் அல்ப பலன்களில் நமக்கு நோக்கம் ஏற்படாது. அனந்தமான மோக்ஷஸுகம் வரையிலுள்ள ஸகல புருஷார்த்தங்களையும் அடையலாம்.
(தொடரும் ...) மிக்க நன்றி : ஶ்ரீ ஞானானந்த பாரதீ க்ரந்த ப்ரகாசன ஸமிதி

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ||श्रीशारदास्तोत्रम्||

## श्रीशृङ्गाद्रौ श्रीशारदानवरात्रोत्सवसमये

### ஶ்ரீஶாரதா$^3$ஸ்தோத்ரம்

### (ஶ்ரீ சிருங்க கிரியில் சாரதாநவராத்திரியின்போது)

**(ஶ்ரீ சிருங்ககிரி ஶ்ரீ சாரதா பீடாதிபதி ஜகத்குரு ஶ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹ பாரதீ மஹாஸ்வாமிகள் இயற்றியது)**

श्रुत्वा तवाम्ब निनदं किल कीरडिम्भः कण्ठे तवास्ति शुक इत्ययमाकलय्य ।
इच्छन्विनिर्गमनमस्य बहिस्तवाद्य हस्ताम्बुजे स्थिरतया वसतीति मन्ये ।।69।।

ஶ்ருத்வா தவாம்ப$^3$ நினத$^3$ம்' கில கீரடி$^3$ம்ப$^4$: கண்டே$^2$ தவாஸ்தி ஶுக இத்யயமாகலய்ய .
இச்ச$^2$ன்விநிர்க$^3$மநமஸ்ய ப$^3$ஹிஸ்தவாத்$^3$ய ஹஸ்தாம்பு$^3$ஜே ஸ்தி$^2$ரதயா வஸதீதி மன்யே
..69..



## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)

அம்மையே! உன்னுடைய இனிமையான குரலைக் கேட்ட அந்தக் கிளிக்குஞ்சு, “உன் கழுத்தினுள் ஒரு கிளி இருக்கிறது” என்று எண்ணுகிறது. அந்தக் கிளி வெளியே வருமென்று எதிர்பார்த்து, இன்று உன் தாமரைப் போன்ற திருக்கையில் அசையாமல் அமர்ந்திருக்கிறது என்று நான் நினைக்கிறேன். (69)

क्षुधातुरः कश्चन कीरडिम्भस्तृषार्दितोऽन्यश्च तयोर्हि मातः ।
एकस्तु कर्णोत्पलमत्तुमिच्छत्यन्यः करस्थामृतपानकामः ।।70।।

க்ஷுதா⁴துர: கஶ்சன கீரடி³ம்ப⁴ஸ்த்ரு’ஷார்தி³தோ(அ)ன்யஶ்ச தயோர்ஹி மாத: .
ஏகஸ்து கர்ணோத்பலமத்துமிச்ச²த்யன்ய: கரஸ்தா²ம்ரு’தபானகாம: ..70..

அம்மையே! உன்னருகில் உள்ள இரண்டு கிளிக்குஞ்சுகளில் ஒன்று பசியால் வாடுகிறது; மற்றொன்று தாகத்தால் வருந்துகிறது. அவற்றில் ஒன்று உன் காதில் அணிந்திருக்கும் நீலோத்பல மலரை உணவாக உண்ண விரும்புகிறது; மற்றொன்று உன் கையில் உள்ள அமுதத்தைப் பருக ஆவலாக உள்ளது. (70)

पादनम्रपुरुषान्किं बोधयितुं लज्जया गिरां देवि ।
अपिधाय नैजरूपं धत्से पुरुषाकृतिं ब्रूहि ।।71।।

பாத³னம்ரபுருஷான்கிம்’ போ³த⁴யிதும்’ லஜ்ஜயா கி³ராம்’ தே³வி .
அபிதா⁴ய நைஜரூபம்’ த⁴த்ஸே புருஷாக்ரு’திம்’ ப்³ரூஹி ..71..

தேவியே! உன் திருவடிகளில் பணிந்து நிற்கும் மக்களுக்கு உபதேசம் செய்வதில் நாணம் கொண்டு, உன் இயல்பான பெண் வடிவத்தை மறைத்து, ஆண் வடிவத்தை ஏற்றுக் கொள்கிறாயோ? இதன் காரணத்தைச் சொல்லுங்கள். (71)

प्रसवित्र्यां हि सुतानां नैव भवेत्साध्वसं कदाचिदपि।
मत्वेति बोधनकृते गुरुवररूपं दधासि किं मातः ।।72।।

ப்ரஸவித்ர்யாம்’ ஹி ஸுதானாம்’ நைவ ப⁴வேத்ஸாத்⁴வஸம்’ கதா³சித³பி.
மத்வேதி போ³த⁴னக்ரு’தே கு³ருவரரூபம்’ த³தா⁴ஸி கிம்’ மாத: ..72..

அம்மையே! பிள்ளைகளுக்கு தாயிடம் எப்போதும் அச்சமோ பயபக்தியோ இருப்பதில்லை. அதனால், “இவள் நம் தாய்” என்று எண்ணி உன் உபதேசத்தை அலட்சியப்படுத்திவிடக் கூடும் என்பதற்காக, அவர்களுக்கு ஞானத்தைப் போதிக்கும் போது நீ உயர்ந்த குருவின் வடிவத்தை ஏற்றுக்கொள்கிறாயோ? (72)

(தொடரும் ...)

**ஸத் ஸம்ப்ரதாயம்**

An Unit of the e magazine Voice of Jagadguru)

# ஸ்ரீமத் அத்யாத்ம ராமாயணம்

## பாலகாண்டம்

### நான்காவது ஸர்கம்

மகாதேவர் கூறினார்:



ஒரு சமயம் நெருப்பைப் போல ஒளிவீசும் விசுவாமித்திரர், தனது மாயையால் மனிதராக அவதரித்த பரமாத்மாவான ராமரை தரிசிக்க அயோத்திக்கு வந்தார். விசுவாமித்திரரை கண்ட தசரத மன்னன் உடனே எழுந்து, வசிஷ்டருடன் சேர்ந்து, விதிப்படி அவரைப் பூஜித்து வரவேற்றான். பக்தியுடன் கைகூப்பி முனிவரை வணங்கி: "முனிவரே! தங்களின் வருகையால் நான் பாக்கியசாலியாகிவிட்டேன்." என்று கூறினான். "தங்களைப் போன்ற மகான்கள் எந்த வீட்டிற்கு வருகிறார்களோ அங்கு செல்வமும் மங்களமும் தானாகவே வருகின்றன. தாங்கள் எதற்காக வந்தீர்களோ அதைச் சொல்லுங்கள்; நிச்சயமாக நிறைவேற்றுகிறேன்." என்று தசரதன் கூறினான்.

விசுவாமித்திரர் கூறினார்: "நான் தேவர்களுக்கும் பித்ருக்களுக்கும் யாகம் செய்யத் தொடங்கும்போதெல்லாம் மாரீசன், சுபாஹு மற்றும் அவர்களது அரக்கர்கள் வந்து இடையூறு செய்கின்றனர். ஆகவே அவர்களை அழிப்பதற்காக உன் மூத்த மகனான ராமனை, இலட்சுமணனுடன் எனக்குக் கொடு. அதுவே உனக்கும் நன்மையாகும்." இதைக் கேட்ட தசரதன் மனக்கவலையுடன் தனியாக வசிஷ்டரிடம் ஆலோசனை கேட்டான்.

**தசரதனின் கவலை:** "குருவே! ராமனை அனுப்ப என் மனம் ஒப்புக்கொள்ளவில்லை. பல ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து பெற்ற பிள்ளைகள் இவர்கள். நால்வரும் அமரர்களைப் போன்றவர்கள்; அவர்களில் ராமன் எனக்கு மிகவும் பிரியமானவன். ராமன் சென்றுவிட்டால் நான் உயிரோடு

இருக்க முடியாது. ஆனால் விசுவாமித்திரரின் வேண்டுகோளை மறுத்தால் அவர் சாபமிடுவார். சத்தியத்தையும் மீறக்கூடாது. எனக்கு என்ன நன்மை ஏற்படும்?" வசிஷ்டர் கூறினார்: "அரசனே! மிகவும் ரகசியமான தெய்வீக உண்மையை கேள். ராமன் சாதாரண மனிதன் அல்ல; அவன் சனாதன பரமாத்மா.பூமியின் பாரத்தை குறைப்பதற்காக முன்பு பிரம்மனால் வேண்டப்பட்ட அதே பரமன், உன் மனைவி கௌசல்யையின் கருவில் அவதரித்திருக்கிறார். முன் பிறவியில் நீ பிரஜாபதியான கஷ்யப முனிவராக இருந்தாய். கௌசல்யை தேவமாதாவான அதிதியாக இருந்தாள். நீங்கள் இருவரும் பல ஆண்டுகள் கடுமையான தவம் செய்து, உலக இன்பங்களைத் துறந்து, விஷ்ணு தியானத்திலும் பூஜையிலும் முழுமையாக ஈடுபட்டிருந்தீர்கள். அதனால் பக்தவத்ஸலனான விஷ்ணு மகிழ்ந்தார்."

அப்போது விஷ்ணு: "ஒரு வரம் கேள்" என்று கூறியபோது, "நீங்களே எங்களுக்கு மகனாகப் பிறக்க வேண்டும்" என்று நீ வேண்டினாய். அந்த வரத்தின் பலனாகவே இன்று விஷ்ணு ராமனாக உனக்குப் பிறந்துள்ளார். லக்ஷ்மணன் ஆதிசேஷனின் அம்சமாக ராமனைப் பின்பற்றி பிறந்துள்ளார். பரதன் மற்றும் சத்ருக்னன் ஆகியோர் விஷ்ணுவின் சங்கு, சக்கர அம்சங்களாக அவதரித்துள்ளனர். யோகமாயை சீதா என்ற பெயரில் ஜனகரின் மகளாகப் பிறந்துள்ளார். "விசுவாமித்திரரும் ராமனை சீதையுடன் இணைப்பதற்காகவே வந்துள்ளார். இந்த ரகசியத்தை யாரிடமும் சொல்லக்கூடாது." "எனவே மகிழ்ச்சியுடன் விசுவாமித்திரரைப் பூஜித்து, ராமனையும் இலட்சுமணனையும் அவருடன் அனுப்பிவை."

(தொடரும்…)


Our Website link : https://www.voiceofjagadguru.com/
Telegram Channel : https://t.me/voiceofjagadguru

Instagram Channel :

https://www.instagram.com/stories/voice_of_jagadguru_voj/3601249542534134684?igsh=MW90YW13N2c5b2hqaA==

WhatsApp Community Channel: https://chat.whatsapp.com/Ly4wlaTu8Kc3sjjEYU8KGu

YouTube Channel : https://youtube.com/@jagad-guru-channel?si=brkLFqiz8sZJ6UIl

Facebook link : https://www.facebook.com/share/1Du5xkve4e/

For free e magazines : Our Mail ID : Info@voiceofjagadguru.com

## ஸத் ஸம்ப்ரதாயம்

An Unit of the e magazine Voice of Jagadguru)


| Editorial Board | | |
|---|---|---|
| Sri P A Murali | Hon' Advisor | Administrator & CEO, Sri Sringeri Mutt & It's Properties, Sringeri |
| Sri S N Krishnamurthy | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| Sri Tangirala Shiva Kumara Sharma | Hon' Editor | Sri Sringeri Mutt, Sringeri |
| PujyaSri Swami Guruparananda | Hon' Editor | Founder Acharya, Poornalaya & Mentor Sri Swami Chidbhavananda Ashram, Vedapuri, Theni. |
| Sri B Vijay Anand | Web Director | Coimbatore |
| Smt B Srimathi Veeramani | Web Asst Director & Chief Editor | Tirunelveli |
| K M Kasiviswanathan | Hon' Editor | Tirunelveli |